ஓம்.

சிவகணபதி துணை.

சிவசாமிநாத சிவஞானதேசிகர் திருவடி வாழ்க.

359
...ANDAR KOVI...

# சன்மார்க்கவியல்.

இஃது

மதுரைச் செந்தமிழ்ச் சங்கத்தாபகரும்,

பாலவநத்தம் ஜமீன்தாரரும்,

அக்கிராசனாதிபதியுமாகிய

ஸ்ரீமான்

பொ. பாண்டித்துரைசாமி வேந்தரவர்கள்

விருப்பத்தின்படி

மதுரைத் தமிழ்ச்சங்கத்து

ஒன்பதாமாண்டின் உத்ஸவம்

தஞ்சையிற் கூடியகாலத்து வித்வசபையின்கண்

உபயோகித்த பிரசுரம்.

ஆனந்த ஷண்முக சரணாலயன்,
சிவாநந்தானுபூதி நிலயம்,
தில்லைவளாகம்.

திருவாரூர்
"[illegible] அச்சுக்கூடத்தில்"
பதிப்பிக்கப்பெற்றது.

1910-ஆம் மே மீ 22உ

MAHAMAHOPADHYAYA

களைச்[illegible]மேமறகூடப்பித்
தின்ற சரஸ்வ[illegible]ஸ்தம்பங்களும், அவ்வளைகள்சோர்ந்தனவா களுடன் [illegible]வீழ்ந்தனவாகவுமிருந்தன. சிலமங்கையர் கைகளி ற் [illegible]இருக்கின்ற வளைகளெல்லாம், விநாயகப்பெருமானுடைய மார்பைப்புல்லாதகைகளில் நாமிருப்பதாலென்னபயனென்றாகமூழவிவீழ்ந்தன. சிலநங்கையர்முடித்திருக்கின்றகூந்தல்களெல்லாம், அவர்கள் உள்ளநெகிழ்ச்சியை அக்கணேசமூர்த்திக் கறிவிப்பதுபோல அவிழ்ந்துசோர்ந்தன. சிலகோதையர் ஆனந்தக்கூத்தாடினார்கள். சிலபேதையர் நயந்தெரிந்துபாடினார்கள். சில அரிவையர்குறிஞ்சி முதலியபண்களைப்பாடினார்கள், சிலதெரிவையர்பா[illegible]யிற்கலந்தாடினார்கள். இவ்வாறு பேதை பெதும்பைமங்கைமடந்தை அரிவைதெரிவை பேரிளம்பெண்என்னும் எழுவகைப்பருவங்களைப் பெற்றிருக்கின்ற ஸ்திரீசாதிகளெல்லாந் தெருக்களில்நிறைந்து நின்று காதல்கொள்ளத்தக்கதாக, என்னையாட்கொளபவராகிய விநாயகமூர்த்தியானவர் அலங்கரித்திருக்கின்ற வீதிகளைவலமாகவந்து, மீட்டும் அரமனையிற் பிரவேசித்தனர். அத்தருணத்தில் காமதேனு சிந்தாமணி பஞ்சதாரு சங்கநிதி பதுமநிதி என்னும் இவைகள் வேறுவேறுருவங்கொண்டு, வந்தவர்கட்கெல்லாம் பெருமைபெற்ற பலதிரவியங்களை அவ்வவர்கள் வெறுக்கும்படியாகமழைபோற்சொரிந்தன. இவ்வண்ணம் திருக்கல்யாண சம்பிரமங்கண்முழுவது நிறைவேறியபின்னர், தேவர்கள் முனிவர்கள் திக்குப்பாலகர் கணநாதர்கள் பூமண்டலவாசிகள் பாதலவாசிகள் முதல்மற்று தீபாந்தரங்களிலிருந்து வந்தவர்கள்யாவருஞ், சிவபெருமான் பார்வதிதேவியாரோடும் வீற்றிருக்கின்ற சபையைச்சேர்ந்து, தீர்க்கதெண்டனசெய்து விடைபெற்றுத் தம்பதிசமேதரா வெழுந்தருளியிருக்கின்ற விநாயகமூர்த்தியைக்கண்டு, பலமுறை துதித்துச் சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்து அவரது திருவருளைப்பெற்றுத் தங்கடங்கள் பதவிகளிற்சேர்ந்தனர். இப்பால்சிவபெருமான் தம்மோடுவந்த கந்தவேன்முதலிய காரணர்களெல்லாம் புடைசூழ்ந்து வரும்படியாகச், சித்திபுத்தி மணாளராகிய கணேசமூர்த்தியை யழைத்துக்கொண்டு, பார்வதிதேவியாரோடுங் கைலைக்கெழுந்தருளித் தமதுபஞ்சகிருத்தியங்களை நடத்தியிருந்தனர். விநாயகக்கடவுளுந்தமது உலகத்திற்சென்று மனைவியராகிய சித்திபுத்திகளோடுங்கலந்து சகலபோகங்களையும் அனுபவித்திருந்தனர். சுபம் சுபம்.

# முகவுரை

அநாதி முத்த சித்துருவாகிய சிவபெருமான் திருவருட் காரியமாய்த் தோன்றுகின்று தொழிற்பட்டகிலத் திருநாமம் வகித்த இந்நிலவுலகத்தின் ஐந்திணைப்பொருளுமமைந்து பல்வளமை நந்தாதிலகு நாவலந்தீவில் எந்த நன்னாட்டினுஞ் செந்தமிழ்நாடே சிறந்ததாமென அக்காலத் தறிஞர்களாலும் இக்காலத் தெந்தேசத்தாராலும் புகழ்தற்குரிய இத்தமிழ்நாட்டின்கண் கல்வியறிவொழுக்கத்திற் சிறந்த வித்வான்கள் பல நகைப்பாரென நாணமின்றி அற்ப அறிவுங் கல்வி முடைய அடியேன் திருவாரூர் ஸ்ரீ கமலாம்பிகா விலாச சங்கம் ஆரம்பகாலத்தில் "அன்பிய" லென்னும் ஒரு விஷயமெழுதி யச்சிடுவித் துபயோகித்தும், ஷெ சங்கம் வருடோத்ஸவத்தில் கடவுள் வழிபாடென்னும் ஒரு விஷயமெழுதி யச்சிட் டுபயோகித்தனன். மேற்படி சங்கத்தி னங்கத்தினர் விரும்பியவண்ணம் விஞ்ஞாபனஞ் செய்து அக்கிராசனம் வகித்த

செகமெலாம்புகழு முகவைமாநகரில்
நன்னய சுகுணப் பொன்னுச்சாமிமால்
பண்ணியமாதவப் புண்ணிய குமாரன்
அளக்கர்கோனென்ன வளக்கரு நிதியினன்
அனந்தனென்னுமா றனந்தநூலாய்ந்தோன்
அமிழ்தினுமினிய தமிழெனு நங்கை
ஆதரவின்றிப் பேதுறுங் காலை
அஞ்சேலென்னத் தஞ்சந்தந்தே
முச்சங்கங்களு மிச்சங்கத்துக்
கீடிலையென்னக் கூடலம்பதியிற்
சங்கம்வளர்த்திடும் புங்கவனுலகு
காண்டகுசீர்த்திப் பாண்டித்துரைவேள்

கல்வியிலாரும், செல்வமுளாரும், செல்வமிலாரும், அருளுடையாரும், அருளிலாரும் மெய்ஞ்ஞானியரும, அஞ்ஞானியரும், சாதகரும், சாத்தியரும் ஆகிய யாவரும் வேதாகமங்களினும் அதன் சாரமாய் ஆன்றோரருளிய நூற்களினும் விதித்துள்ள நிட்டைதமின்றிய நல்லொழுக்கத்திற் பொதுவகையா னொழுகற்பாலதேயாம். இது நோக்கியன்றோ

### திருக்குறள்

ஒழுக்கம் விழுப்பந்தரலா னொழுக்க
முயிரினு மோம்பப்படும்.

ஒழுக்கமுடைமை குடிமை யிழுக்க
மிழிந்த பிறப்பாய்விடும்.

ஒழுக்கத்தினெய்துவர்மேன்மை யிழுக்கத்தி
னெய்துவ ரெய்தாப்பழி —எனவும்,

தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார் கூறியுள்ளார். அவர்வாக்கையும் வேதாகமங்களோ டொப்பக்கொள்ளற் பாலதோ வெனின்

தேவர்குறளுந் திருநான் மறைமுடிவு
மூவர்தமிழு முனிமொழியுங்—கோவைத்
திருவாசகமுந் திருமூலர் சொல்லு
மொருவாசக மென்றுணர் —எனவும்,

நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா நான்முகத் [தோன்
றன்மறைந்து வள்ளுவனாய்த் தந்துரைத்த—நூன்முறையை
வந்திக்கச்சென்னி வாழ்த்துகநா னெஞ்சஞ்
சிந்திக்கக் கேட்கச்செவி. —எனவும்,

ஆன்றோர் கூறியவற்றினும் ஏனைய நூற்கள்போலன்றி திருவாலவாய்ச்செந்தமிழ்ச்சங்கத்தேறி தனியமரப்பெற்றதனாலும் அச்சங்கத்தனைவராலும் புகழ்ப்பெற்றதனாலும் தற்காலத்திய எவ்வருணத்தரும் எம்மதத்தரும் கல்வியறிவுடையரும் பொதுவகையான் கைக்கொள்ளற்பாலதாய் வழங்கிவருதலானும் பேதமன்றும். இன்னும்,

## தாயுமான சுவாமிகள்

காரிட்டவாணவக் கருவறையிலறிவற்ற
கண்ணிலாக்குழவியைப்போற்
கட்டுண்டிருந்தவெமை வெளியில்விட்டல்லலாங்
காப்பிட்டதற்கிசைந்த
பேரிட்டுமெய்யென்று பேசுபாழ்ம்பொய்யுடல்
பெலக்கவிளை யமுதமூட்டிப்
பெரியபுவனத்தினிடை போக்குவரவுறுகின்ற
பெரியவிளையாட்டமைத்திட்
டேரிட்டதன்சுருதி மொழிதப்பினமனைவிட
டிடருறவுறுக்கி யிடர்தீர்த
திரவுபகலில்லாத பேரின்பவீட்டினி
லிசைந்துதுயில் கொண்மினென்று
சீரிட்டவுலகன்னை வடிவானவெந்தையே
சித்தாந்தமுத்திமுதலே
சிரகிரிவிளங்கவரு தக்ஷிணாமூர்த்தியே
சின்மயானந்தகுருவே.

எனச் சிவானுபவச்செல்வர்களா யெழுந்தருளியிருந்த ஸ்ரீ தாயுமானசுவாமிகள் திருவாக்கைச் சிந்திக்குமிடத்து

அநாதிமல முத்த சித்துருவாகிய பரசிவம் ஆன்மாக்களொரு பிரயோசனமுங் குறியாது அநாதியே ஆணவமலத்திற் கட்டுண்டு யாதுமுணர்வின்றிக் கிடந்த ஆன்மாக்களின்மேல் வைத்த பெருங்கருணையினாலே அவ்வாணவ மலத்துவ நீக்கமுஞ் சிவத்துவவிளக்கமுஞ் சித்திக்கும்பொருட்டு தனுகரணங்களையும் புவனபோகங்களையுங் கொடுத்து சிறிது அறிவைவிளக்கி அவர்களுணர்ந்தொழுகியுய்யுமாறு வேதாகமங்களை யருளிச்செய்தும் அதில்விதித்த நெறியொழுகும் ஆன்மாக்கட்கு மறக்கருணைபுரிந்து இரட்சித்து அ[illegible]டைவித்தும் விதியின்றி நிஷேதநெறியொழுகும் ஆன்மாக்கட்கு மறக்கருணைபுரிந்து சிட்சித்து சுவர்க்க நரகாதி போகங்களைத் துய்ப்பித்தும் பின்னர் பலபிறப்பினுண்டாம் புண்ணிய பரிபாகத்தாலும் விதிநெறி யொழுகுதலாலும் இருவினை யொப்பு மலபரிபாகம் சத்திநிபாதமுறுவித்து அரியவீ டடைவிப்பனெனவும் விளங்குகின்றது.

ஆனால் இறைவன் கருணைசொரூபனானதால் மறக்கருணைபுரிதல் இயல்பாமோவெனின் அவையும் அறக்கருணையேயன்றி வேறன்றாம்! என்னெனின் தன்பால் இறைவனிரங்கி யருளியபேருதவியை ஆன்மாக்கள் மறந்து தனக்குபகாரணமாயீந்த தனுகரண புவன போகங்களிலாழ்ந்தி யானெனதென்னுஞ் செருக்குற்றுப் பிறர்மாட்டுச்செய்யு மிதாகிதங்களாகிய வினையொழித்தற் பொருட்டேயன்றி வேறன்றாம்.

இதாகிதமாகிய வினையாதெனின்: மாறுபாடுடைய மனம்வாக்கு காயங்களால் உயிர்க்குறுதியென வேதாகமங்களில் விதித்தவற்றைச்செய்தலே இதம்; அவற்றை மாறுதலைச்செய்தலே அகிதம்; ஆதலால் அவ்விரண்டினையு மறியவல்ல முதல்வனே அவற்றைக்கைக்கொண்டு இவ்விடத்தில் இன்ப துன்பமாகிய பயனளிப்பன்.

ஆன்மாக்கள் செய்த கன்மத்தை முதல்வனேற்றுக் கொடுத்தற்குக் காரணம் யாதெனின்: யாண்டும் நிறைந்த அம்முதல்வன் உயிர்கள் வீடுபேறடைதற்பொருட்டு வைத்த கருணையேயாம். கருணையாயினும் காரணம் இருவேறுவகைப்படும். நிகழ்ந்தமையின் பயனும் இருவேறு வகைப்படச் செய்யவேண்டுதலான் அறமிகுந்த இதமாகியவினையைச் செய்வோருக்கு அநுக்கிரகத்தைப் புரிவன். மறமிகுந்த அகிதமாகிய வினையைச்செய்வோருக்கு நிக்கிரகத்தைப் புரிவன். முதல்வன் அநுக்கிரகஞ் செய்தலேயன்றி அங்ஙனம் அகிதஞ்செய்தாரைக் கண்டித்தலும் கருணையினால் நல்வழிப்படுத்தற்பொருட்டேயாம். அக்கிரமத்தாற் செய்யப்பட்ட குற்றங்களைக் கண்டித்து நீக்குதலான் அச்சமுண்டாகச்செய்து இம்முறையா லிங்ஙனம் அறத்தினைச்செய்தல்வேண்டுமென வுணர்த்துவன். திரோபவித்தல், சங்கரித்தல்களுட்பட்ட எம்முறையாலும் இறைவன்செய்தி என்ஞான்றுங் கருணையாதற்கிழுக்கில்லை. அவை உலகத்துத் தாய் தந்தையர் புத்திரர்கள் தங்கள் சொல்வழி யொழுகாராயின் உரப்பி மலாரினலடித்து தீயவிலங்கு மிடுவராக

லான இன்னோரன்னவை பார்க்குமிடத்து செயல்வகை யான வெகுளிபோற்றோன்றினும் கருத்துவகையான் அருளேயாதல் முடிவில் அறியப்படும். எக்காலமு முதல்வனிக்கிரகமும் இந்த இயல்பேயாலு முறைமை யாம்.

இருவினை முதலாயின அழிவெய்துவன ஆதலானும் இவைகளெல்லாம் சிவபிரானை வேறுவகைகொண்டலா னும் அவனை அறக்கருணையாளனெனவும் மறக்கருணை யாளனென்பதும் சுவமென்பதுபோந்தது. அதுவன்றி தேவர்களெல்லாம் சிவபிரான் கற்பித்தருளியவேலையா பெரியோர்களாவது அசலசொல்வழியொழுகாமையினை கண்டுத் தண்டித்து நடுவுநிலை ஆணைப்படையால் சிறைக்களத்தே தேவர்களோடு அரசொழிவழி நடப்போரை வாதுளித் தண்டித்து அவனுடைமைத்தகையால் கொராரோயா களோடு உபிரகாகு இன்பதுன்பங்கள் அவனருளா லாகுமாதலனேயாம்

உலகத்துவேந்தர் ஆணையாற்கீழ்ந்த கடந்து ஒழுக்க நெறியில் நடவாதாரை ஆணையினாலே ஒறுத்து ஒப்பறுத் தலிய சிறைக்களப்படையும் வையார். அவ்வொழு வழி நடப்போரை பெரியபதவு, செல்வமும் பொது வாழ்விந்த்த தங்கீழ் அதிகாரமுந் தெய்வமையார். அமைச்சர் முதலாயினோமட்டு அவ்வாறுகாணப்படும் ஆணையும் அவ்வேந்தரது ஆணையேயாம். அதுபோல் முதல்வன்பாட்டுங் கண்டுகொள்க

இவ்வுலகத்துள்ளோர் பெரும்பாதகங்கள் செய்தி டின் அரசனவன் கொடியதண்டஞ்செய்து மேலும் பாவஞ்செய்யின் இத்துணையினன்றி இன்னுங் கொடுந் தச செய்வலெனத்தண்டத்தை யெடுத்துச்சொல்லி அச் சுறுத்தி ஒழிப்பன். அறிவுடையார் பின்பு விதிவழி நடந்து நிரயத்தின் அழுந்தார். அந்த நரகதண்டம் இவ் வரசதண்டம்போல முன்னுதற் கேதுவாகின்ற தன்மை யுடையதாம். இங்ஙனம் அரசதண்டம் வைத்தது நரக

தண்டம்வாராமற் பாதுகாத்தற்பொருட்டும் ஆகலான் அவ்வரசனாணையும் முதல்வனாணையின் வழித்தாவதன்றிச் சுதந்திரமன்று.

கருணையினாலுரைத்தருளிய வேதாகமநூல் வழி நில்லாதுபாவஞ்செய்யின் இருள்செறிந்த நரகத்திட்டுத் துன்பத்தினை நுகர்வித்து பெரியபாவத்தினை யொழிப்பன். அதிசயப்பொருள்கள் தங்கிய துறக்க முதலியவற்றின் வைத்து இன்பத்தினை நுகர்வித்து நூல்வழிநின்று அருள்வழி நில்லாமையாகிய புண்ணியத்தினையொழிப்பன் சிவபிரானாகியவைத்தியன். பந்த முறுதற்கேதுவாகிய பாவபுண்ணியமிரண்டும் உயிர்க்கு நோயாகலின் அந்நோய்தீர்த்தற்குரிய இன்பதுன்பங்கள் மருந்தாம்.

## போற்றிப் பஃறொடை.

இருவினையான் முன்புள்ள வின்பத்துன்பங்கள்
மருவும்வகையங்கே மருவி—யுருவுடனின்

றோங்குநுதலாய வோலக்கமண்டபத்திற்
போங்கருவியெல்லாம் புகுந்தீண்டி—நீங்காத

முன்னைமலத்திருளுண் மூடாவகையகத்துட்
டுன்னுமிருணீக்குஞ் சுடரேபோ—லந்நிலையே

சூக்கஞ்சுடருருவிற் பெய்துதொழிற்குரிய
ராக்கிப்பணித்த வறம்போற்றி—வேட்கைமிகு

முண்டிப்பொருட்டா லொருகாலவியாது
மண்டியெரியும்பெருந்தீ மாற்றுதற்கு—திண்டிறல்சோ

வல்லார்கள்வல்ல வகையாற்றொழில்புரிந்த
வெல்லாமுடனே யொருங்கிசைந்து—சொல்காலை

முட்டாமற் செய்வினைக்கு முற்செய்வினைக்குஞ் செலவு
பட்டோலைதீட்டும் படிபோற்றி—நட்டோங்கு

மிந்நிலைமை மானுடருக்கேயன்றி யெண்ணிலா
மன்னுயிர்க்குமிந்த வழக்கேயாய்—முன்னுடைய

நாளெல்லைவரையி லுடல்பிரித்து நல்வினைக்கண்
வாளின்மாலா யயனாகி—நீணாகர்

வானாடர்கோமுதலாய் வந்தபெரும்பதத்து
நானாவிதத்தா னலம்பெறுநா—டான்மாள

வெற்றிக்கடுந் தூதர் வேகத்துடன்வந்து
பற்றித்தன் வெங்குருவின் பாற்காட்ட—விற்றைக்கு
மில்லையோ பாவி பிறவாமையென் றெடுத்து
நல்லதோரின்சொ னடுவாகச்—சொல்லியவர்
செய்திக்குத்தக்க செயலுறுத்துகவென்று
வெய்துற்றுரைக்க விடைகொண்டு—மையறரும்
செக்கினிடைத் திரித்துந் தீவாயினிட்டெரித்துந்
தக்கநெருப்புத்தூண் டழுவவித்து—மிக்கோங்கு
நாராசங்காய்ச்சிச் செவிமடுத்து நாவரிந்து
மீராவுன் னூனைத் தின்னென் றடித்து—பேராம
லங்காழ் நரகத்தழுத்துவித்தும் பின்னுந்தம்
வெங்கோபமாறாதே வேட்டையரா—யிங்கொருநா
ளெண்ணி முதற்காணுது வின்னாற்கடு நரகம்
பன்னெடுநாட்செல்லும் பணிகொண்டு—முன்றுழ
கண்டுடன் கழித்தல் காரியமாமென் றெண்ணக்
கொண்டு வருமோபினை றறிப்பரிவார்—மண்டப
நாய்ச்சிச சுடவறுக்கக் கண்ணுரிக்க நன்னிதிய
மிப்ததுத் தாய்தந்தைதம ரின்புறுதல்—வாய்ததமெநா
யோடிய தேரின்கீ ழுயிர்போன கன்றாலே
நீமெய்பெரும் பாவமின்றே நீங்குமென—நாடித்தன்
மைந்தனைப் பூர் சோன் வழங்கே வழக்கா
றுஞ்சனைய சிறை நமன்தூதர்—வெஞ்சினத்தா
லெல்லலுறுத்து மருநரகங்கண்டு நிற்க
வல்ல கருணை மறைப்போற்றி—பல்லுயிர்க்கு
மன்னவகையா விருவினைக ணின்றருத்தி
முன்னை முதலென்ன முதலில்லோ னல்வினைக்க
ணெல்லாவுலகு மெடுப்புண் டெடுப்புண்டு
செல்காலம்பின் னரகஞ்சேராமே—நல்லநெறி
யெய்துவதோர் காலந்தன் னன்பரைக் கண்டின்புறத்
துய்யும்நெறி சிறிதே யுண்டாக்கிப்—பையவே
மட்டாய் மலராய் வருநாளின் முன்னைநாள்
மொட்டாயுருவா முறைபோலக்—கிட்டியதோர்
நல்லபிறப்பிற் பிறப்பித்து நாடும் வினை
யெல்லை யிரண்டு மிடையொப்பிற்—பல்பிறவி
யத்தமதிலன்றோ வளவென்று பார்த்திருந்து
சத்திபதிக்குந் தாம்போற்றி.

எனச் சந்தானாசிரியர்களிலொருவராகிய உமாபதி சிவமருளிய திருவாக்கானும்—" சுருதிமொழி தப்பி னமனைவிட் டடருறவுறுக்கியிடர்தீர்த் திரவுபகலில்லாத பேரின்பவீட்டினி லிசைந்து 'துயில்கொண்மினென்று சீரிட்ட வுலகன்னை வடிவான வெந்தையே"—என ஸ்ரீ தாயுமானசுவாமிகளருளிய திருவாக்கானு முணரற்பாலது. இறைவன்செய்யு மறக்கருணையும் அறமேயாமென்பது தெற்றென விளங்கும்.

ஆகலான் அரியமானிட தேகத்தைப் பெற்றவர்கள் பெறுதற்கரிய பரமுத்திக்கு ஏதுவாயது சன்மார்க்கமென்னும் ஞானமேயாயினும் ஞானசாதகரும் சாத்திய ஞான ஒழுகற்பாலதும் ஞானத்துக்கு ஏதுவாக முன்பு பாவநங் கைக்கொண்டொழுகற்பாலதும் சன்மார்க்கமென்னும் நல்லொழுக்கமேயாகலினாலும் சிவபெருமான் அருளிய வேதாகமங்களின் விதித்த நெறியாதலினாலும் அவனது மறக்கருணைக்குப் பாத்திரமன்றி அறக்கருணைக்குப் பாத்திரமாகலினாலும் பொதுவகையான் மனிதப் பிறவியையடைந்த யாவரும் ஒழுகற்பாலதாகலினாலும் அவற்றை ஒருவாறுரைப்பாம்.

நல்லொழுக்கமாவது:—பொறுமை, இரப்பார்க்கீகை, சர்வ பிராணிகளிடத்தும் இரக்கம், சத்பாத்திரமறிந்து தானஞ்செய்தல், உண்மை வசனம், தீயவிடயங்களிற் செல்லாது ஐம்பொறியடக்கல், தீய சிந்தனையின்றிக் கரணங்காத்தல், கோட்சொல்லாமை, உயிர்க்கொலை புரியாமை, பிறர்மனையிச்சியாமை, யாவரிடத்தும் அகிதவசனமுரையாமை, பிறர் செய்ந்நன்றி மறவாமை, காமம் வெகுளி மயக்கமென்னு மூக்குற்றங்களையகற்றல், சொன்மாறுதுகாத்தல், புண்ணியதீர்த்தமாடல், கடவுளர்பூஜையாற்றல், கிடைத்தவரை யுண்மகிழ்ந்திருத்தல், பிறர் பொருள் கவராதிருத்தல், கடூர வார்த்தையின்றிப் பேசுதல் கடவுளாலயத்தும் பெரியோரிடத்தும் வந்தித்து வழிபடுதல், தான் புரிந்த பாவச்செயல்களை யுரைத்துப் பெரியோராற் பிராயச்சித்தஞ்செய்துகொள்ளல், தான்

புரிந்த புண்ணியங்களை பிறர்பால் பலகாலெடுத்துரையா திருத்தல், தங்கள் தங்கள் வருணாச்சிரமங்கட்குவிதித்த கன்மானுஷ்டானங்களை வழுவாதியற்றுதல், அக்னிகாரியம் தேவதாபூஜை தியான செபமாதிகளை முடித்துப் போஜனம் பண்ணுதல், தென்புலத்தார் தெய்வம் விருந்து சுற்றமுதலியவர்கட்கு அன்புடன் உபசரித்து வேண்டியவற்றையுதவல்—என அநேகமாம்.

அரிய பிறப்பாலாய பயன் நல்லொழுக்கத்தினிற்றலே யெனவும், அவை நீங்கின் உயர் வருணத்துதித்தவரேயாயினும் இழிகுலத்தவரேயாமெனவு மிருகபிறப்பேயாமெனவும் ஆன்றோர் கூறியவற்றைக்காண்க.

### விநாயக புராணம்.

தாழ்ந்தவருணத் துதித்தவருந் தக்கோராவ ரொழுக்கத்தால்
வீழ்ந்தவொழுக்கத்தா ரிழிவர்மேலாம்வருணத்துதித்திடினுஞ்
சூழ்ந்த துணையாஞ் சிறப்பின்பஞ் சுரக்குமதனாலுயிர்தனினும்
வாழ்ந்த வொழுக்க மோம்பிடுக வழுக்கினிடும்பையே தருமே

### இராமாயணம்.

தக்கவின்ன தகாதன வின்னவென்
றொக்க வுன்னலராயி னுயர்ந்துள
மக்களும் விலங்கே மனுவின்னெறி
புக்கவே லவ்விலங்கும் புத்தேளிரே —எனவும்,

### நாலடியார்.

அறிவ தறிந்தடங்கி யஞ்சுவதஞ்சி
யுறுவ துலகுவப்பச் செய்து—பெறுவதனா
லின்புற்றுவாழு மியல்புடையா ரெஞ்ஞான்றுந்
துன்புற்று வாழ்தலரிது.

பிறர்மறை யின்கட் செவிடாய்த் திறனறிந்
தேதிலாரிற்கட் குருடனாய்த்—தீய
புறங்கூற்றின் மூகையாய் நிற்பானேல் யாது
மறங்கூற வேண்டா வவர்க்கு —எனவும்,

### சிலப்பதிகாரம்.

பரிவுமிடுக்கணும் பாங்குற நீங்குமின்
றெய்வந்தெளிமின் றெளிந்தோர்ப் பேணுமின்

*பொய்யுரை யஞ்சுமின் புறஞ்சொற் போற்றுமின்*
*ஊனூண்டுறமின் உயிர்க்கொலை நீங்குமின்*
*தானஞ்செய்மின் றவம்பல தாங்குமின்*
*செய்ந்நன்றி கொல்லன்மின் தீநட்பிகழ்மின்*
*பொய்க்கரி போகன்மின் பொருண்மொழி நீங்கன்மின்*
*அறவோரவைக்கள மகலாதணுகுமின்*
*பிறவோரவைக்களம் பிழைத்துப் பெயர்மின்*
*பிறர்மனையஞ்சுமின் பிழையுயி ரோம்புமின்*
*அறமனைகாமின் அல்லவை கடிமின்*
*கள்ளுங்களவுங் காமமும் பொய்யும்*
*வெள்ளைக் கோட்டியும் விரகினி லொழிமின்*
*இளமையுஞ் செல்வமும் யாக்கையும் நிலையா*
*வுளநாள்வரையா தொல்லுவ தொழியாது*
*செல்லுந் தேஎத்துக் குறுதுணை தேடுமின்*
*மல்லன்மா ஞாலத்து வாழ்வீரிங்கென*—என்பவற்றானு
முணர்க. இன்னும்,

*செய்யாமொழிக்குந் திருவள்ளுவர் மொழிந்த*
*பொய்யாமொழிக்கும் பொருளொன்றே—மெய்யா*
*மதற்குரியா ரந்தணரே யாவ*
*ரிதற்குரியா ரல்லாதாரில்.* —என

ஆன்றோர் விதந்தோதப்பெற்ற திருக்குறளின் தெய்வப் புலமைத்திருவள்ளுவ நாயனார் வகுத்தருளிய முப்பாலின் முதற்பாலாகிய அறப்பாலி னுரைத்தவற்றையும் இங்கு விரித்துரைப்பாம். ஏனெனின் முற்கூறியநல்லொழுக்கத்திற்கு இன்றியமையா தெடுத்துரைக்கற்பாலதேயாம்.

அவை கடவுள்வாழ்த்து, வான் சிறப்பு, நீத்தார் பெருமை, அறன்வலியுறுத்தல், இல்வாழ்க்கை, வாழ்க்கைத்துணைநலம், புதல்வரைப்பெறுதல், அன்புடைமை, விருந்தோம்பல், செய்ந்நன்றியறிதல், நடுவுநிலைமை, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, பிறனில் விழையாமை, பொறையுடைமை, அழுக்காறாமை, வெஃகாமை, புறங்கூறாமை, பயனில சொல்லாமை, தீவினையச்சம், ஒப்புரவறிதல், ஈகை, புகழ் என்னும் இருபத்துமூன்றுமாம்.

(க) அவற்றுள் கடவுள் வாழ்த்து என்பது (நூலுக்கு முதலாயுள்ள மூர்த்தியை வாழ்த்துதல்) என்றால்— விருப்பு வெறுப்பகன்று தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல் பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை என்னும் எண்குணத்தோடு தனக்குப்பிறிதொப்பற்றிருக்கின்ற கடவுள் யாதோ அதன் திருவடிகளைத் துதித்தலேயாம்.

(உ) வான்சிறப்பு என்பது (அக்கடவுளது ஆணையால் உலகமும் அதற்குறுதியாகிய அறம்பொருளின்பங்களும் நடத்தற்கேதுவாகிய மழையினது சிறப்பு) என்றால் வானம் வழங்காதாயின் அறநெறியால் வரும் பொருள்களைத் தக்கார்க்கு உவகையோடு தானங்கொடுத்தலாகிய இல்லறமும் மனம் பொறிவழிப்போகாது நிற்றற்பொருட்டுத் தவஞ்செய்தலாகிய துறவறமுங் கெடுமாதலால் அவ்வானம் வறுமையெய்தாவண்ணம் வேள்விகளையும் தருமங்களையுஞ் செய்துவரல் வேண்டுமென்பதேயாம்.

(ங) நீத்தார் பெருமை என்பது (முற்றுந்துறந்த முனிவரது பெருமை) என்றால் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்குபொருள்களையுந் தெரிந்து பஞ்சேந்திரியங்களை நிக்கிரகித்த முனிவர்கள் வேதியர் புலமையோர் என்னும் இக்கூட்டத்தினரிடத்து அன்புகாட்டியிருத்தல்வேண்டும். இவர்கள் ஒருகாற் கோபித்து ஓரழற்பொறியுதிர்ப்பாராயின் காத்தருளுகின்ற கடவுளுங் கலக்கமெய்தும்; ஆகலால் அப்பெரியோர்களை வழுத்துவதேகடன். அவர்கள் பொறுப்பரென்று அவமதிக்கத்தகாது. தூவர்களையும் பெரியோர்களையும் வேதாகமங்களையும் மேலாகவெண்ணிப் பாவத்தக்கதேயன்றி ஒளித்தேனும் ஓர் நிந்தனையைக் கருதலாகாதென்பதேயாம்.

(ச) அறன் வலியுறுத்தல் என்பது (அம்மேலோரா லுணர்த்தப்பட்ட உறுதிப்பொருள் நான்கனுள் அறமானது பொருள் இன்பம் வீடு என்னு மூன்றனையும் தருவதற்கேதுவாகலால் அதனை வலியுறுத்திக் கூறுதல்) என்றால் செல்வப்பொருளும் சொர்க்கலோக வின்ப முத்தி வீடும் ஆகிய மூன்றனையுந் தருவதான அறத்தினை மனம் வாக்குக் காயம் என்கின்ற முக்கரணத்தானும் ஒன்றுபட்டு நாடோறும் பரிந்து நடாத்திவரல்வேண்டும். அதனை நேர்ந்தபோது செய்யாது பின்னாற் செய்துமெனக்கருதிவழுவவிடலாகாது. அவ்வாறுவிடாமல் இயன்றவரை செய்து வருங்காலத்திலும் பிறராக்கம் பொறாமையும் புலன்கண்மேற் செல்லுகின்ற அவாவும் அவையேதுவாகப் பிறர்பால் வரும் வெகுளியும் அதுபற்றி வருங் கடுஞ்சொல்லும் ஆகிய நான்கனையுங் கடிந்து செய்தல்வேண்டும். அறத்தாலடிக்கு மின்பமேயின்பமன்றி மற்றை யின்பங்களெல்லாந் துன்பத்தினையும் பழியையுந்தோற்றுவிக்கும்; அதனை மறந்தோர்க்கு எல்லாக் கேடும் வந்து உற்பவிக்கும் என்பதேயாம்.

(ரு) இல்வாழ்க்கை என்பது (இல்லறத்தோடுங் கூடி வாழ்தல்) என்றால் பிரமசாரி வானப்பிரத்தன் சந்யாசி பிதிரர் குரவர் தேவர் விருந்து ஒக்கல் பெரியோர் மறையோர் இறந்தோர் ஏற்போர் உறுப்பில்லார் பிணியாளர் விருத்தர் பாலர் சிசுக்கள் மூத்தோர் என்னுமிவர்களையோம்பி இல்லறநெறியை வழுவாமற்செய்தலேயாம்.

(கூ) வாழ்க்கைத் துணைநலம் என்பது (அவ்வில்வாழ்க்கைத் துணையாகிய இல்லாளது நன்மை) என்றால் ஒருவன் எய்தும் பொருள்களுள் மனையறத்திற்குத் தக்க நற்குண நற்செய்கைகளை உடையவளாயும் தன்னைக் கொண்டவனது வருவாய்க்குத்தக்க வாழ்க்கையையுடையவளாயுமிருக்கின்ற இல்லாளின் மேம்பட்ட பொருள்கள் யாவையுள? அவளால் மேலானபுகழும் பிரயோசனமுமுண்டாவதன்றிப் பகைவரெதிரில் இடபத்தைப் போலமனக்கோட்டமின்றிநடக்கத்தக்க பெருமித நடை

யுமுண்டாகும். ஆதலால் அத்தன்மைத்தாகிய மனைவியோடு உவப்புற்று வாழ்தலேயாம்.

(எ) புதல்வரைப் பெறுதல் என்பது (அந்தணர் முதலிய மூவரானும் இயல்பாக இறுக்கப்படும் கடன் மூன்றனுள் முனிவர்கடன் கேள்வியானும், தேவர்கடன் வேள்வியானும் தென்புலத்தார்கடன் புதல்வரைப் பெறுதலானும் அல்லதுஇறுக்கப்படாமையின் அக்கடன் இறுத்தற்பொருட்டு நன்மக்களைப் பெறுதல்) என்றால், புதல்வரானவர் பிறப் பேழின்கண்ணும் பெற்றோருக்குத் தீவினை வளராது தேய்த்தற்குக் காரணமாகிய நல்வினைகளையும் தென்புலத்தார்க்குரிய கடன்களைச்சாலமுடிக்கு மாண்பினையுமுடையோராதலால் குற்றமற்ற தவங்களைச் செய்தேனும் புதல்வரைப் பெறவேண்டும். பின்னர் அப்புதல்வரை கற்றோர் அவையத்தின்கண் அவரினுமிக்கிருக்குமாறு கல்வியுடையவராக்கல்வேண்டு மென்பதேயாம்.

(அ) அன்புடைமை என்பது (இல்லறம் இனிது நடாத்தலும் பிறவுயிர்கண்மேல் அருள் பிறத்தலுமாம்) என்றால் யாக்கை யகத்தின்கணின்று இல்லறத்திற்குறுப்பாகிய அன்புடையரல்லாதார்க்குப் புறத்தின்கண் இடனுள் பொருளும் ஏவல் செய்வாருமான உறுப்புக்களெல்லாம் அவ்வறஞ்செய்வதற்கண் என்ன உதவியைச் செய்யும்? ஒருவன் சோர்வுற்றகாலத்தும் அவ்வன்பின் வழுவாதிருத்தல்வேண்டும். அவ்வாறிருத்தலினால் நொதுமலுட் பகையுமுறவாகும். அளவிறந்த சிறப்பெய்தும். மேற்கூறிய வாழ்க்கைத்துணையையு மைந்தரையும் தொடர்பின் வளர்த்துவருமென்பதேயாம்.

(க) விருந்தோம்பல் என்பது (பண்டை அறிவுடையாராய்க் குறித்து வந்தாரையும் அஃதின்றிக் குறியாது வந்தாரையும் பேணி அவர்க் குபகாரஞ்செய்தல்) என்றால் பயன்வேண்டினோர் விருந்தினரைச் சேய்மையிற்கண்டுழி இன்முகமும் அவர் பற்றி நண்ணியவழி இன்சொல்லும் பின்னர் உடன்பட்ட வழி வஞ்சங் கல

வாத நன்ருற்றலும் என இன்றியமையாத இம்மூன்ற ுள் முதற் கண் இன் முகம் வேண்டும். அஃதில்லா விடின் மோர்ந்துழியல்லாது வாடாத அனிச்சம்பூவினும விருந்தினர் மெலியராதலால் அவர் செய்மைக்கண்ணே வாடி நீங்குவரென்பதேயாம்.

(௧0) செய்ந்நன்றியறிதல் என்பது (தனக்குப பிறர்செய்த நன்றியை மறவாமை) என்ருல் இவர்க்கு இதுசெய்யின் இன்னதுபயக்குமென்று ஆராய்தலில்லா மல் ஒருவனுக்கு இறுதிவந்த எல்லைக்கண்செய்த உப காரந்தன்னை நோக்கச சிறிதாயிருந்ததாயினும் அக்கா லத்தைநோக்க அதற்கோரளவில்லை அல்லது பயனுமேல னுங் காரணத்தாலேனும் வருந்தும் பதத்திற்செய்த உதவியாயின் அதனை உலகத்தினும் பெரிதாகவிரும்பி மதித்தல் நற்போரது கடமையாம். மேலுந் தமக்கு முன்னொரு நன்மைசெய்தவர் பின்கொன்ருலொத்த இன்னுதவற்றைச் செய்தாராயினும் அவர்முன்செய்த நன்மையை மதித்துப் பின்செய்த தீமையைச் செய்த பொழுதே மறத்தல்வேண்டும். இல்லையாயின் அந்தனை ரைக்கொன்ற பிழையினுமேலானபிழை மலைபோலப் பெருகுமென்பதேயாம்.

(௧௧) நடுவுநிலைமை என்பது (அறத்தின் வழு வாது ஒப்ப நிற்குநிலைமை) என்ருல் பகை, நொதுமல், நண்பு என்னு மிம்மூன்று பகுதியினும் சமனுகநின்று நோக்கும் நிலைமையுடையாற்குச் செல்வப்பேறு மக்கட் பேறும் உண்டாகும். இவ்விரண்டுபேறும் அம்மக்கள் வழியுள்ளாற்கும அழிவின்றி நிலைத்திருக்கும். அந் நிலைமையினை யடையாராயின் அஃது அவர்க்குத் தீவினை யாற் கேடும், நல்வினையாற் பெருக்கமுமாக முன்னர் அமைத்திருக்கின்ற பயன்களைப்போக்கிஇடையில் வேறு வேறுன பெரும்பிழைகள் வந்துபொருந்தும்.

(௧௨) அடக்கமுடைமை என்பது (முக்கரணங் களும் தீநெறிக்கட் செல்லாது அடங்குதலுடையனு

தல்) என்றால் இல்லறத்திலிருந்து எல்லாப்போகங்களை யும் பஞ்சேந்திரியங்கட்கு விருந்தூட்டி வாழ்கின்ற காலத்தினும் மெய், மொழி, மனம் ஆகிய மூன்றனையும் அவவிந்திரியங்களின் வழிச் செல்லவிடாமல் அடக்கினோர் ஏழுவகைப்பிறவியினும் நல்வினைப்பயனையடைவர். அவர் அப்பிறவிகடோறுஞ் செய்துவருகின்ற வினைகளெல்லாம் நல்வினையேயாகும். எல்லாத்துன்பங்களும் ஒழியும். தருமதேவதையும் அடுக்கும். சுவர்க்கலோகத்தினையும் அடைவாரென்பதேயாம்.

(கங) ஒழுக்கமுடைமை என்பது (தத்தம் வருணத்திற்கும் நிலைமைக்கும் ஓதப்பட்ட ஒழுக்கத்தினையுடையராதல்) என்றால் தாழ்ந்த வருணத் துதித்தவராயினும் ஒழுக்கமுடையவராயின் உயர்ந்தவராவர். உயர்ந்த குலத்திற் பிறந்தாராயினும் ஒழுக்கமில்லாராயின் இழிந்தவராவர். ஆதலால் அவ்வொழுக்கத்தினை எல்லாப் பொருளினுஞ் சிறந்ததாகிய உயிரினுமேலாக எண்ணிப் பாதுகாத்தல்வேண்டும். அஃது தன்னை யடுத்தோர்க்குத் துணையாகச் சூழ்ந்து எல்லாச் சிறப்பினையும் இன்பத்தினையும் சுரப்பிக்கும். தன்னை வழுக்கிவிட்டோர்க்கு இழுக்கினைத் தருமென்பதேயாம்.

(கச) பிறனில் விழையாமை என்பது (காமமயக்கத்தாற் பிறனுடைய இல்லாளை விரும்பாமை) என்றால் பிறனுக்குப் பொருளாயுள்ள தன்மையையுடையாளைக் காதலித் தொழுகுகின்ற அறிவீனர்களும் வரைவின்மகளிரோடும் இழிகுல மகளிரோடுங்கூடி இன்பத்தினை நுகர்வாரும் அறமும் பொருளும் இழத்தலேயன்றி அச்சத்தாற் றுங்கருதிய இன்பத்தையும் இழக்கின்றாராதலால் பிறனில்லாளைக் காதலிக்குந் தீங்கினைக் கைவிடல் வேண்டும். இல்லாவிடின் பகை பாவம் அச்சம் குடிப்பழி என்னும் நான்கு குற்றமும் ஒருக்காலும் நீங்காவாம். எல்லாப்பெருமைகளும் அழியும். அத்தீமையினையொழிந்தோர்கள் அறம் பொருள் இன்பம் என்னு மூன்றினோடுங் கூடி வாழ்வர். ஓர் விளையாட்டால் அத

ளைக் கனவின்கண் கருதுவாராயினும் எல்லாத் தீங்கும் வந்தெய்துமென்பதேயாம்.

(கரு) **பொறையுடைமை என்பது** (ஒருவன் தமக்கு மிகைசெய்யின் அதனைத் தாமும் அவன்கட் செய்யாது பொறுத்தலை யுடையாராதல்) என்றால் ஒருவன் காரணத்தாலேனு மடமையாலேனும் தாம் வெறுக்கும்படியாகச்செய்த பிழையைப் பொறுப்பதே பேரறமாகும். தமக்குத் தீங்கு செய்தானையொறுத்தார்க்கு உண்டாவது கருதியது முடித்தேமெனத் தருக்கியிருக்கும் பொய்யின்பமாகிய அவ்வொருநாளை யின்பமே யன்று, அதனைப் பொறுத்தார்க்கு உலகு அழியுமளவு முண்டாகும் புகழும் நிறைவும் அவருக்கில்லை. அறிவுடையாரு மகிழ்ச்சிகொண்டு பொறையுடையாரைப் பொன்போலப் பொதிந்துகொள்வர். மிகைசெய்தவனைப் பகைசெய்தலால் வருவதொன்றுமில்லை யாதலால் பொறுமையை உயிர்த்துணையாக எண்ணல்வேண்டுமென்பதேயாம்.

(கசு) **அழுக்காறாமை என்பது** (பொறாமை செய்யாமை) என்றால் ஒருவன் தன்னெஞ்சத்தின்கண் அழுக்காறென்னும் பெரும்பிழையை யுடையானாயின் அது அவனுக்குரிய ஒழுக்கநெறிகளைக் கெடுக்கும். எல்லாப் பொருள்களையு மொழிக்கும். இம்மைக்கட்செல்வத்தைக்கெடுப்பதன்றி அவன் சுற்றத்தினர்க்கும் உண்ணப்படுவன, உடுக்கப்படுவனவின்றிக் கெடுத்து மறுமைக்கண் நரகத்திற் செலுத்திவிடும். ஆதலால் அவ்வழுக்காறென்னும் பெரும்பகையைத் தேவர்களிடத்தும் செலுத்தாதிருத்தல் வேண்டுமென்பதேயாம்.

(கள) **வெஃகாமை என்பது** (பிறர்க்குரியபொருளை வௌவக்கருதாமை) என்றால் பிறர்க்குரியன கோடல் நமக்கு அயனன்றென்று நடுவுநிலைமையின்றி அவர் நன்பொருளை ஒருவன் கரவக்கருத்துறுவனாயின் அக்கருத்து அப்பொழுதே அவனுக்குப் பல குற்றங்களைக் கொடுத்து அவன் குடியையுங் கெடச்செய்யும்; என்றும்

அழியாத பெருந்துன்பத்தினையும் விளைக்கும்; வசை யுற்ற பழிச்சொற்களையும் வளர்க்கும். பழமையாயுள்ள நிரைப் புதியவெள்ளங் கொண்டுபோவதுபோல அவ னுக்கு முன்னுள்ள பொருள்களும் அழிந்துபோம்.

(கஅ) புறங்கூறுமை என்பது (காணுதவழிப் பிறரை இகழ்ந்துரையாமை) என்றால் ஒருவன் எந்நாளும் அறமென்பதைக் கொன்று பாவங்களைச் செய்வா னாயினும் தம்மெதிர்நின்று மாளவுரைத்தானாயினும் அவனைக்காணுதவழி இகழ்ந்துரைப்பதை மறந்தும் செய் யாதிருத்தல்வேண்டும். செய்வாராயின் சுற்றத்தினர் பிரிவார், நட்பினர் நாடார். யாவரும் நேர்நின்று வசை கூறுவர்.

(கக) பயனில் சேல்லாமை என்பது (தமக்கும் பிறர்க்கும் அறம்பொருளின்பமாகிய பயன்களுள்ஒன்று மயவாத சொற்களைச் சொல்லாமை) என்றால் பயனில வாகிய பொருள்களை ஒருவன் விரித்துரைப்பானுயின் அஃது அறிவுடையார்க்கு வெறுப்பைச் செய்வதன்றி எல்லாராலும் இகழ்ந்து நகைக்கப்படும். வெளிற்றறிவன் என்னும் பெயரையுண்டாக்கும். விழுப்பத்தினையும்மதி ப்பினையு நீக்கிவிடும். அறம் முதலிய நான்கு உறுதிப் பொருள்களும் பயக்காது. ஆதலால் யாவரிடத்தும் பயனில சொல்லாமைவேண்டும்.

(உ0) தீவினையச்சம் என்பது (பாவங்களாயின செய்தற்கு அஞ்சுதல்) என்றால் இப்பூவுலகத்தின்கண் பலவகைகட்குந் தப்பிப்பிழைத்தல் எளிதாகும். தீவி னைப்பகையானது எக்கதியிற்செல்லினும் பின்றொடர்ந்து நன்றென்பன வனைத்தையுங்கொன்று அருந்துயரைப் பலவாறளிக்கும். ஆதலாற் கொடிய தீவினையால் யா தொன்றுஞ் செய்யாதிருத்தல்வேண்டும்.

(உக) ஒப்புரவறிதல் என்பது (உலகநடையினை யறிந்துசெய்தல்) என்றால் ஒருவன் தனது முயற்சி

யாற் பெருக்கிய பொருள்களையெல்லாம் ஊரின்வாழ்வார் தண்ணீருண்ணுங்குளம் நீர் நிறைந்தாற்போலும் பயன் படு மரம் ஊர்நடுவே பழுத்தாற்போலும் யாவர் மாட்டும் செலுத்தி ஒப்புரவினிற்றல்வேண்டும். அவ்வொப்புரவு செய்தலால் அவனுக்குப் பொருட்கேடு வருமாயினும் அக்கேடு தன்னை விற்றாயினும் கொள்ளுந் தகுதியை யுடையது.

(உஉ) ஈகை என்பது (வறியாரயேற்றற்கு மாற் றாது கொடுத்தல்) என்றால் ஒருவன் தன்னிடத்தில் இரக்கவந்தானாயின் அவன் வீணிற்செல்ல யான் இது பொழுது பொருளுடையேனல்லேன் எனக் கரப்பாற் சொல்லுஞ்சொல்லை யுரையாது அவன் இரப்பினை நிரப் புதலும் யான் வறியேனென்று சொல்லும் இளிவரவை பிறர்பாற் கூறுகவென்று இரப்பினும் அதனையவ்வாறு கூறாது இரக்கமோ டிதலும் இரப்பானிலனென்று சொல்வதன்முன் குறிப்பறிந்தீதலும், அதுபோதாமைபற்றி ப்பின்னும் பிறனொருவன்பாற் சென்று அவனுரையா வகை கொடுத்தலும் எக்காலத்தும் வறியனென்னுவகை அளவின்றி யளித்தலும் ஆகிய இவ்வைவகை ஈகையும் ஒன்றுக்கொன்று மேலான புகழோடு விளங்கிநிற்கும். அன்றியும் இவன் நலமிகுந்த செல்வத்தைப்பெற்றுந் தரித்திரரைக் காக்குந் தன்மை இலன். அறமாதி புரு ஷார்த்தங்களு மிலனென்று பிறர் கூறும் பழியுரைக் கஞ்சியேனும் புகழும் பிரயோசனமும் வேண்டினேன் இரப்பானை வறியானென்று அவமதிக்காது தனது ஆக் கையையுமளித்தல்வேண்டும்.

(உங) புகழ்—என்பது (இல்வாழ்க்கை முதல் ஈகை ஈறாகச்சொல்லப்பட்ட இல்லறத்தின் வழுவாதார்க்கு இம்மைப்பயனாகி இவ்வுலகத்தின்கண் இகழ்ந்து இறவாதுநிற்குங் கீர்த்தி) என்றால் பூதவுடம்பிறக்கினும் பூதலமழியுங்காறும் புகழுடம்பிருக்குமாதலால் அப்புக ழுடம்போடு வறியார்க்கு வரையாதுகொடுக்கும் கொடையால் உண்டாகின்ற செல்வத்தைப் பெற்றுவாழும்

பேற்றினையுடையவரே வான்செல்வத்தையுந் தமக்குக் கீழாக்கும் நீர்மையையுடையார்—எனவும் கூறிய திருவள்ளுவநாயனார் திருவாக்கானு மெய்மை யுணர்ந்து விதித்த நல்லொழுக்கத்திற் பயிற்றலே இவ்வரிய பிறப்பாலாய பயனும்.

## திருக்குறள்.

தன்னைத்தான் காதலனாயி னெனைத்தொன்றுந்
துன்னற்கத் தீவினைப்பால்.

என்றதனாலே ஒருவன் நல்லொழுக்கத்திற் பிரவர்த்தித் தொழுகானாயினும் தீயொழுக்கத்திற் பிரவர்த்தியாதிருத்தலே மிகுந்த புண்ணியமாம். தீயொழுக்கம் இன்னவென வுணரவேண்டுபதின்றேவெனின் அவை நல்லொழுக்கத்திற்கு மறுதலைப்பொருளேயாயினும் அவற்றிற் சிலவற்றைக் கூறுவாம்.

கொலை, களவு, கள், காமம், பொய், குருநிந்தை, தெய்வநிந்தை முதலியனவும் குருபத்தினி கற்புடைய மகளிர் முதலியவரைக் கலக்க விசசித்தலும், பிரமஹத்தி, கோஹத்தி, ஸ்ரீ ஹத்தி, சிசுஹத்தி முதலிய செய்தலும், இல்லத்திற் றீவைத்தல், தேவாலயம், மடம், சத்திரம், சாவடி முதலியவற்றைச் சிதைத்தலும், ஆறு, ஏரி, குளங், கூப முதலியவற்றைத் தூர்த்தலும், பூஞ்சோலை முதலியவற்றை யழித்தலும், வருணாச்சிரம தன்மங்களை வழுவி நிற்றலும், அபயமென்றவரை யகற்றல், தாய், தந்தை, ஆசிரியர், பெரியோர் முதலியோர்க் கிடுக்கண்செய்து உபசரியாதிருத்தலும் இன்னும் பல வாம். விரிப்பிற் பெருகும்.

இன்னுஞ் சிலவற்றை வருஞ் செய்யுட்களா லுணர்க.

## பிரபுலிங்க லீலை

குரவர்தம் மனைகடக்குங் கொடியனுந் துறந்துளார்தம்
வரவெதிர் கண்டெழாத மறவனு மறிந்தான் போன்று
கரவினி லருநூல்கற்குங் கயவனும் புதியராகி
இரவினில் வந்த நல்லோர்க் கிடங்கொடா தகற்றுவானும்.

முன்புகழ்ந் துரைத்துப்பின்னர் முறுவல்செய் திகழ்வான்றா
னுந், தன்பெருங்கிளை நல்கூர்ந்து தளர்வுற வாழ்கின்றானு
மன்புகொண்டொருவன்வைத்த வரும்பொருள் கவர்கின்றா
னுந், துன்புறுந் தொழில்செய்வித்துச் சொல்பொரு ளிலை
யென்பானும்,

உறவுசெய்தறிந்த சொல்லை யுவர்த்தழிக்கூறுவானும்
பிறர்பிழைதனையேநாடிப் பிறரொடு பேசுவானு
முறைவழு வுறுகொடுஞ்சொன் முனிவிடை மொழிகுவானு
மறிவழி மனைவிசொல்லின் வழிநிற்கு மறிவிலானும்

## இராமாயணம்.

நாரங்கொண்டார் நாடுகவர்ந்தார் நடையல்லா
வாரங்கொண்டார் மற்றொருவர்க்காய் மனைவாழுந்
தாரங்கொண்டா ரென்றிவர் தம்மைத்தருமந்தா
னீருங்கண்டாய் கண்டகருய்ந்தா ரெவரையா

உய்யநிற்க பயமென்றா னுயிரைத் தன்னுயிரினோம்பாக்
கையனுமொருவன்செய்த வுதவியிற் கருத்திலோனு
மையறநெறியினோக்கி மாமறை நெறியினின்ற
மெய்யினைப் பொய்யென்றானு மீள்கிலாநரகில் வீழ்வார்

## சீவகசிந்தாமணி.

மல்லன்மலையனைய மாதவரை வைதுரைக்கும்
பல்லவரேயன்றிப் பகுத்துணாப்பாவிகளு
மல்குல் விலைபகரு மாய்தொடியா ராதியா
வில்பொருதோண்மார்பா விலங்காய்ப் பிறப்பவே.

கொல்வதே கன்றிநின்றார் கொடியவர் கடியநீரா
ரில்லையேயிம்மையல்லா லும்மையு முயிருமென்பா
ரல்லதுந்தவமுமில்லை தானமுமிழுவென்பாருஞ்
செல்பவர் நரகந்தன்னுட் டீவினைத் தேர்களூர்ந்தே

## வளையாபதி.

பொய்யன்மின் புறங்கூறன்மின் யாரையும்
வையன்மின் வடிவல்லன சொல்லிநீ
ருய்யன்மி னுயிர்கொன் றுண்டுவாழுநாள்
செய்யன்மின் சிறியாரொடுதீயன.

கள்ளன்மின் களவாயினயாவையுங்
கொள்ளன்மின் கொலைகூடிவருமற
மெள்ளன்மின் னிலரென்றெண்ணி யாரையு
நள்ளன்மின் பிறர்பெண்ணொடு நண்ணன்மின்.

## திரிகடுகம்.

தன்னைவியந்து தருக்கலுந் தாழ்வின்றிக்
கொன்னேவெகுளி பெருக்கலு—முன்னிய
பல்பொருள் வெஃகுஞ் சிறுமையு மிம்மூன்றுஞ்
செல்வமுடைக்கும் படை.

நன்றிப்பயன் றூக்கா நாணிலியுஞ் சான்றோர்முன்
மன்றிற் கொடும்பா டுரைப்பானு—நன்றின்றி
வைத்தவடைக்கலங் கொள்வானு மிம்மூவ
ரெச்சமிழந்து வாழ்வார்.

## திருக்குறள்.

தீயவைதீய பயத்தலாற்றீயவை
தீயினுமஞ்சப்படும்.

மறந்தும்பிறன்கேடு சூழற்கச் சூழி
னறஞ்சூழுஞ் சூழ்ந்தவன்கேடு.

வஞ்சமனத்தான் படிற்றொழுக்கம்
பூதங்களைந்து மகத்தேநகும்.

## தூசலோபாக்கியானம்.

ஓங்குபெருஞானியர்போற்பேசுவா ரவருண்மைவேடம்போலப்
பாங்குபெறவுடற்புனைவார் சற்கருமஞ்செய்வார் தம்பக்கமேகி
நீங்குகவென்றொழிப்பா ரிங்கிலைமேலாம்பிரமத்தி னிலைமெய
[யென்பா
ங்கிவர்கடாங்கெடுவதன்றி மற்றோரையுங்கெடுக்கு மெண்ண
[ம்பூண்டோர்.

பொன்முதல பொருளிடத்து மிச்சையற்றோர்
போற்றுறவு பூண்டுபின்னர்
வன்மைசெறிமனத்த பக்குவர்க்குபதேசமு
நவிற்றி வருவதெல்லா

நன்மைதருமுன்னோ ரெண்காறொழுகப்
பள்ளையென நயந்தோராயன்
புன்மையறப் பற்றியஃ துடனழிந்தா
னென்றகதைபோலு மாதோ.

மிக்கவறிவுடையாரைப் போன்றுமுடற்
பற்றனைத்தும் விடுத்தார்போன்றும்
தக்கவழக்கிடத்தி னுயர்திணைவினை
யஃறிணைவினையாச் சமைய்ச்சொற்றும்
தொக்கபடர்க்கைப் பெயர்முன்னிலைப் பெயராக்
கிடவுரைத்துஞ் சூழ்வதெல்லாம்
பஃகுவமின் மடவோரை மயக்கியவர்கைப்
பொருளைப் பறித்தற்கன்றோ.

இதுகாறுங் கூறியவை சிவபெருமானருளிய வேதாகமோக்தசாரமாய் ஆன்றோர்களருளிய விதியாகிய நல்லொழுக்கமின்னவெனவும் நிஷேதமாகிய தீயொழுக்கமின்னவெனவு முணர்தற்பாலனவேயாம். நல்லொழுக்கத்தைக் கைக்கொண்டொழுகுதலால் இம்மையிற் புகழும் புண்ணியமும் இன்பமும் பின்னர் பரமுத்திக்கேதுவாகிய ஞானமு முளவென்பதையுந் தீயொழுக்கத்தைக் கைக்கொண்டொழுகுதலால் இகழ்வும், பாவமும், துன்பமு நரகாட்சியு முளவென்பதையுங் கருதி மேலாகிய நல்லொழுக்கத்தைப் பற்றிப் பயிறலே அரிய பிறவியாலாய பயனாம். கூறிய புறவொழுக்கத்தினிற்றலினால் பின்பு அகவொழுக்கஞ் சித்திக்கும்.

அகவொழுக்கமாவது யாதெனின்:- மனதைக் காமங் கோபத் தந்தம் வழியிற் செல்லவொட்டாது தடுத்து தம்வயப்படுத்தி உண்மை வழியிற் செலுத்துதல். புறவொழுக்கம், அகவொழுக்கம் என்னுமிரண்டும் ஒன்றுக்கொன்று பரஸ்பர சம்பந்தமுடையனவேயாம். இன்னும் அகவொழுக்கத்திற்குப் புறவொழுக்கமே காரணமாகின்றது. எப்படியெனின் வித்து எவ்வளவு நலமுடையதாயினும நிலஞ் சீர்திருத்தஞ் செய்யாவிடின் தக்க பயன்றராததுபோல முன்னர் புறவொழுக்கத்திற் பயின்று பின்னர் அகவொழுக்கத்தினிற்றல் பெருமையுடைத்தாம்.

அகவொழுக்கமும்—இந்திரிய வொழுக்கம், கரண வொழுக்கம், சீவவொழுக்கம், ஆன்மவொழுக்கம் என நால்வகைப்படும். இவற்றுள் இந்திரியவொழுக்கமாவது: கடவுட்கினிய விசையோடு பிறர்பாடுந் தோத்திரங்களை யுற்றுக்கேட்டல், அபசுரங்களைக் கேளாதிருத்தல், கடுஞ் சொற்கள் செவிபுகாமனிற்றல், அசுத்தங்களைத் தீண் டாதிருத்தல், கொரோமாகப்பாராதிருத்தல், உருசிகள் மீது விருப்பின்றியிருத்தல், சுகந்தாதிகளை விரும்பாதி ருத்தல் என்னுமிவைகள் ஞானேந்திரியவொழுக்கமாம்.

இயாவரிடத்து மினிய வார்த்தையாடுதல், பொய் பேசாதிருத்தல், பிறவுயிர்கட்கு இடர் நேருங்கால் எவ் வித வுபாயத்தானும் தடைசெய்திரட்சித்தல், கடவுளா லயத்திடத்தும் பெரியோரிடத்தும் கால்வருந்தச் செல் லுதல், பிரதக்ஷணமாதியசெய்தல், பிறர்கட்குபகாரமாக ஒன்றனையீதல், மலசலபாதை அளவு மீறுமலுங் கிரமங் குறையாமலும் ஔஷதிகளானும், ஆகார பக்குவத்தா லும் நியமப்படுத்திக்கொள்ளுதல் என்னுமிவைகள் கன் மேந்திரிய ஒழுக்கங்களாம்.

எல்லா மனிதரிடத்தினும் ஜாதி, சமயம், குலம், கோத்திரம், சூத்திரம், சாத்திரம், உயர்வு, தாழ்வு முத லிய பேதமற்று ஆன்ம ஒருமை நேயமுற்றிருத்தல் ஜீவ வொழுக்கமாம்.

சர அசரமாகிய சகல சீவர்களிடத்து இரக்கம் பொருந்தி ஆன்மாவேசபையாகவும் அதனுள்ளொளியே சிவமாகவுங் கண்டு கலந்து பூரணமாக நிற்றல் ஆன்ம வொழுக்கமாம்.

இந்நால்வகையான ஒழுக்கங்களில் இந்திரிய வொழுக்கம், கரணவொழுக்கம் என்னுமிரண்டும் தனது ண்மை யறிவானும் சத்துக்கள் சாகவாசத்தானு முயர்ச் சித்தொழுகுதல் கூடும். ஜீவ வொழுக்கம், ஆன்ம வொழுக்கமென்னுமிரண்டும் திருவருட்சகாயம் பெறற் பின்னரன்றிக் கைக்கூடற்கரியதேயாம்.

தப்பினவர் மேலாகிய பதமுத்திகட்கிட்டப்பட்டபுண்ணி யத்தலைவராய் ஆண்டுவைகி இன்பத்தினை நன்குறவனுப வித்து இறைவனருணையால் அவைகளை நீங்கி இவ்வுலகத் தின்கண் உயர்குலத்திற்றோன்றிய திருணையானே ஆசிரியன்பாற்கேட்டன் முதலிய நெறியான் ஞான நிட்டையினைத்தலைக்கூடி வீடுபெறெய்துவர்.

பதிபசுபாசங்கட் கிலக்கணமியாதெனின் :—அநாதியே மலபெந்தமின்றி நித்திய ஞானனந்த சொரூபத் தையுடையவனே பதியாகிய இறைவன். அநாதியே மல பெந்தமுற்ற ஞானக்கிரியையுடையவர்களே பசுவாகிய ஆன்மாக்கள். இருளாகிய ஆணவ மாயை கன்மமாகிய பாசங்கள் மூன்றுமே அநாதியே கட்டுக்களாயுள்ளவை. ஆகையான் மலமாயாகன்மங்கள் பக்குவப்பட்ட விடத்து ஒப்பிலாத அநாதிமுத்தனுகிய கடவுளாலே அநாதி பெத்தராகிய ஆன்மாக்களை அநாதியே பந்தங்களாகிய பாசங்கள் விட்டு நீங்கும்.

எதுபோலுமெனின்:—செம்புடன் சகசமாயிருக்கும் களிம்பு தானே செம்பினைவிட்டு நீங்காது. அச் செம்பினுக்குமக்களிம்பினைத் தானே நீக்கிக்கொள்ளுமாற்றலில்லை. அக்களிம்பை யகற்றவல்ல சித்தியையுடையவனுமுண்டு. அவனால் களிம்பைப் போக்கவல்ல மருந்துமுளவாம்.

இன்னும் விளக்குத் தன்னைத்தானே யுண்டாக்கிக் கொள்ளவல்லதொழில் தன்னிடத்தில்லை. அவ்விளக்குக் குக்காட்டாகிய கண்ணுக்குந்தானே யுண்டாக்கிக்கொள்ளுந்தொழில் தன்னிடத்தில்லை. ஆதலால் விளக்கென்னுஞ் சுடரையுண்டாக்கி கண்ணின் சோதியைத் தடுத்த இருளைநீக்கிப் பொருள்களின் விகற்பங்களையறிவிப்பவனேடொப்பானவன் முதல்வன். கண்களோடொப்பன வுயிர்கள். விளக்கினேடொப்பாகுங் கலாதிதத்துவமாகிய சரீரம்.

அச்சரீரமானது தூலசரீரமென்றும் சூக்குமசரீர மென்றும் இருவகைப்படும். அவற்றுள் தூலசரீரம் பிருதிவிமுதல் ஆகாயமீறாகிய ஐந்து பூதங்களின் பரிணாம காரியத்தாலுண்டாகும். ஏனைச்சூக்குமசரீரம் காலதத்துவமுதல் நிலமீறாகிய முப்பத்தொரு தத்துவத்தாலுமுண்டாகும் தத்துவங்களும் இறைவனுடைய திருவருளின் பிரேரகத்தினால் மாயையினின்றுமுண்டாகும்.

அவை கண்ணில்லாதவன் தன்பாலன்புடையானொருவனுதவிய கோலைப்பிடித்துக்கொண்டேனிச்செல்லும்வழி கருதிச்செல்வன். அதுபோல மூலமலத்தாற்றடைப்பட்ட ஞானக்கிரியைகளையுடைய ஆன்மாக்களும் மாசங்காரகருத்தாவாகிய இறைவனருளியவித்தை முதலிய தத்துவங்களாலுண்டான அற்பவறிவு மாயாபோகங்களை நிச்சயித்துக்கொடுக்க அவைகளை நுகர்ந்து ஆக்கையிற் போக்குவரவு புரியும்.

இவற்றினுண்மை யுணருமாற்றலின்றிய உலகாயதன் முதலிய பூர்வபக்ஷிகளிற்க சித்தாந்தபட்சமியாதெனின் :—

நுண்ணியதத்துவங்களாகிய சூக்குமதேகங்களுக்குக் காரணமாய் வியாபகமாயுள்ள அசுத்தமாயைக்கும் அதற்கு மேலாகிய சுத்தமாயைக்கும் அப்பாற்பட்ட வியாபகமாயுள்ளது. நிருமலையாகிய சிவசத்தி, அச்சிவசத்திக்குச்சிவன் வியாபகன். அந்த நின்மலையாகிய சத்தி வியாப்பியம் அச்சிவசத்தி ஆன்மாக்கட்கு வியாபகி. அவ்வான்மாக்கள் அச்சிவசத்திக்கு வியாப்பியம் அவ்வான்மாக்கள் தமது மலத்தோடுகூடிய ஆன்மசத்திக்கு வியாபகர். அவ்வான்மசத்தி அவ்வான்மாக்கட்கு வியாப்பியம் ஜகத்துக்கு ஆன்மசத்தி வியாபகம், ஆன்மசத்திக்குச் சகம் வியாப்பியம்.

ஆனால் ஆன்மப் பிரகாசமும், அப்பிரகாசத்தை மறைத்து இருளுமொளி யென்னுமாறிருண்ட ஆணவ மலமும் கூடி நிற்பது ஒன்றுக்கொன்றேற்றக்குறைவின்றி

பிரண்டு மொத்த வியாபகமாயிருக்கும். அவ்வான்மாவி னுடைய ஞானக்கிரியைகள் மலத்தாற்றடைப்பட்டால் அதிக விருத்தியுடையதல்ல. அதனைத் தடுக்கும் ஆணவ மலமும் ஞானவிருத்தியை யுடையதல்ல. ஆகையால் ஆன்மசத்திக்கு வியாப்பியமாகாது. ஆனால் ஆன்ம சத்திக்கு ஆணவத்துக்கும் சமவியாத்தி எப்படி எனின் கண்ணிடத்துண்டாகிய சோதியும், இருளின் பிரகாசமும் துல்லியமாயிருக்கும். எதுபோலுமெனின் கண் ணொளியானது இருள் மேலிட்ட காலத்து ஒளி மறை ந்து நிற்கும். ஒளி மேலிட்டகாலத்து இருண் மறை ந்து நிற்கும். இதுபோல சிவன் மாயாகாரியமான தநு வாதிகளை ஆன்மாவுக்குக் கூட்டியகாலத்தும் ஆணவச க்தி மறைந்தவிடத்தும் ஆன்மசத்தி சற்றே பிரகாசமா யிருக்கும். மலமேலிட்டகாலத்து ஆன்மசத்தி மறைந் திருக்குமெனவறிக.

ஆனால் மேலாகிய சிவனும் அவனுடைய மேலாய ஞானசத்தியும் எல்லா வுயிர்களிடத்தும் கலந்திருக்கவும் இருளாகிய ஆணவம் பொருந்துவதெங்ஙன மெனின் வெம்மையுடைய அக்கினி தண்மையுடைய மாத்தின் அடிதொடுத்து முடிவரை வியாபித்திருப்பினும் அப்பசு மாங்கள் வெந்தன வல்ல. முதிர்ந்து தனது பருவம் வந்த விடத்து கம்மிடத்துண்டாகிய தழலை யுதிப்பிக்கும். அவை தீக்கடைக் கோலாகிய கருவியும் அதுகொண்டு கடையுங் கருத்தாவு முதலாயின பழுதறவந்து பொரு ந்த அவ்விடத்து அழலுண்டாய் அம்மாங்கள் வெந்து விழுதலைச் செய்யும். அதுபோல ஆணவமும் தனக்குப் பருவம் வந்த விடத்து இறைவன திருவருளால் தனது வலிகெட்டு நிற்கும். அவை முதல்வனது சத்திமலபரி பாகம் வாராத ஆன்மாக்களிடத்துப் பசுமாத்தக்கினி போல் பிரகாசமின்றியிருக்கும். மலபரிபாகம் வந்த ஆன்மாக்களிடத்துப் பிரகாசித்து மலநாசஞ் செய்து ஆன்மப் பிரகாசத்தை யுண்டாக்கி இரட்சிக்குமென்க.

---

*ஒளிக்கு மிருளுக்கு மொன்றே யிடமொன்று மேலிட வொன்றொளிக்கும், என்பதனானுணர்க.

உதையகாலத்தில் சூரியப் பிரகாசத்தின் முன்னர் இருள் நாசமடையாமல் மறைந்து நின்றதுபோல முதல் வனுடைய அநுக்கிரகத்தினால் ஆன்மாக்கள் பசுத்துவ மாகிய ஆணவமலம் அதனுக்குப்பருவம்வந்தவாறே நாச மடையாது. உயிரின் ஞானக்கிரியைகளைத் தடுக்கும். வலிகெடும் மாயாகாரியங்களும் நாசமடைந்தனவுமல்லா மல் நிலைபெற்று நின்றனவுமல்லாமல் உறைந்திருந்த நெய் உருக்கினபோது கனக்குறைந்து நெய் கெடாதிரு க்கின்றனபோல முத்தி நிலையினும் இந்த மலங்கள் கெடா மலும் ஆன்மாக்களைப் பந்தியாமலும் நிற்கும்.

மேலாகிய சிவன்முதல் கூறிய மலங்கள்வரை ஒன் றுக்கொன்று சூக்குமமாயிருக்கும். அவை சிவன் சிவ சத்திக்குச் சூக்குமமாயிருப்பன். அச்சிவனுக்குச் சிவ சத்திதூலமாயிருக்கும். அச்சிவசத்திஆன்மாக்களுக்குச் சூக்குமமாயிருக்கும் அச்சத்திக்கு ஆன்மாக்கள் அதி தூலமாயிருக்கும். அந்த ஆன்மாக்கள் தனது சத்திக்குச சூக்குமமாயிருக்கும். அந்த ஆன்மசத்தி ஆன்மாவுக்குத் தூலமாயிருக்கும. அந்தஆன்மசத்தி மும்மலங்களுக்குஞ் சூக்குமமாயிருக்கும். அந்த மும்மலங்களும் அந்த ஆன்ம சத்திக்குத் தூலமாயிருக்கும்.

இவற்றின் ஆணவமலம் ஆன்மாக்களுக்குப பெரி தாகிய பிணி. அப்பிணிக்கு மருந்தாகி மாயாகாரியங்களா கிய தனுகரணாதிகளும் அதனோடு அன்றே உள்ளது. அம்மருந்தினை யுதவிப் பிணிதீர்ப்பான் நின்மலனாகிய சிவனே. மருந்து தானேயறிந்துவந்து அடையாதெனவும் பெரிதாகிய ஆணவ நோயையுடையராகிய ஆன்மாக் கள் தாமே தம்பெருநோயைப் போக்கிக்கொள்ளும் மரு ந்தறிந்தாரல்லரெனவும்" வச்சிர்த்திருத்தலால் அப்பிணி நீக்கம் வந்தடைவதன்று. பண்டிதனு நோயுடையானெ னின் அந்நோயை நீக்கினானொரு பண்டிதனுளனென இம்முறையே ஒருவன் பிணியை மாற்றுவானொருவனுளை னுகத் தொன்றுதொட்டு அநவத்தையென்னுங் குற்றம் வரும்; ஆதலால் அநாதியே மலத்தினின்றும் விடப்பட

டவனை உயிர்களடைந்த ஆணவமென்னும் பிணியை நீக்கும் பண்டிதனாவான். இதற்கு இன்னும் ஆன்றோரு ளியவற்றையுங் காண்க.

### சிவஞான வள்ளலார்.

விந்துமோகினி மானெனவிரிந்த
தத்துவக்காட்டிற் றனித்திடுமுயிரை
ஆணவவேங்கை யொருபாலடர்ப்ப
மாயைக் கடாவடி யொருபான்மயக்க
காமியக்கடமா வொருபாற்கறுவ
இருவினைமலைப்பாம் பொருபாலிழுக்க
ஆசையாமண்ணை யொருபாலறைய
குலமெனுஞமலி யொருசார்குரைப்பக்
கல்விக்கான்யா றொருசார்கவர
சமயச்சூறை யொருசார்தாக்க
அவாவெனும்டுதீ அறிவைக்கொளுவ
மாயாவாத வனசரர்வெருட்ட
இன்னணமாவி இடருறுங்காலை
யுயிரிடையொளிபுக் கிருந்தவொருவர்த்
தாயினுஞ்சாலத் தயாநிதியிரங்கி
கட்கடைவாளாற் காடறமாற்றலும்
வுட்கினயாவு முயிர்பிழைத்தன்றே.

எல்லாமுநானேகா ணெனைவிடவேறில்லை
யெனுமலத்தாலார்ப்புண்டிங் கேந்திழைபொன்பூமி
நில்லாதபொருளெல்லாம் நிலையெனவேகருதி
நின்மலனைத் தனைவினையை நினையாதுமயக்கும்
பொல்லாத புலன்வழியிற் றிரிந்துதடுமாறி
புகழிகழா நல்வினையுந் தீவினைப்பொருந்தி
யொல்லாத யோனிதொறும் பிறந்துபிறந்துழல்வார்
உமைபாகனருள்கிடைக்கி னிரண்டினையுமொழிப்பர்.

### திருக்குறள்.

தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றலரிது.

வேண்டுதல் வேண்டாமை யிலானடிசேர்ந்தக்
கியாண்டு மிடும்பையில.

## சிவஞான சித்தியார்.

அருளினு லுரைத்தநூலின் வழிவாரா தனைமருட்டி
யிருளுலா நிரயத்துன்பத் திட்டிரும்பாவந் தீர்ப்பன்
பொருளுலாஞ் சுவர்க்கமாதி போகத்தாற் புணியந்தீர்ப்பன்
மருளுலா மலங்கடீர்க்கு மருந்திவை வைத்தியநாதன்.

இதனால் ஆன்மாக்கட்குற்ற ஆணவாதிமலங்களைப் போக்கி அரியமுத்தியை அடைவிக்குமாறு கருணையினலே வேதாகமங்களை யருளிச்செய்து அதன் விதிநெறி யொழுகுவோர்க்கு மேலாகிய சுவர்க்கமுதலிய பதங்களின் வைத்து அவை நீக்கி அரியமுத்தியளிப்பனெனவும் நிடேதநெறி யொழுகுவோர்க்கு கொடிய நரகாதிகளின் வைத்து அவைநீக்கி ஜனனமரணங்களை யளிப்பனெனவும் விளங்குகின்றன. அரியமனிதப்பிறப்பைப் பெறுதற்குப் பயன் துன்பத்திற்கும் நரகத்திற்கும் ஏதுவாகிய நிடேதநெறியைநீங்கிஇன்பத்திற்கும்முத்திக்கும் ஏதுவாய விதிநெறி யொழுகுதலன்றோ ஆன்மாக்கள்கடமை. ஆதலால் இந்நூலின்கணுள்ள சன்மார்க்கமென்னும் நல்லொழுக்கத்தைக் கைக்கொண்டொழுகியும் பின் சன்மார்க்கம் என்னும் ஞானத்தினின்று பதி, பசு, பாசவிலக்கணங்களை யுணர்ந்தும் கடவுளை வழிபட்டுய்வோமாக. சுபம்.

சன்மார்க்கவியல்

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்த சுவாமிகள் திருவடிகளே சரணம்.

எட்வர்ட் பிரஸ் — திருவாரூர்.

[illegible]

# [illegible]

---

# [illegible]

## முதல் முதல் தமிழில் வெளிவருவது

ஸ்ரீ வேதவ்யாஸ பகவான் அருளிச்செய்த [illegible] பாரதத்தில் அடங்கியிருப்பது இந்த [illegible] [illegible]

[illegible]